TNPSC GROUP I / II - PRELIMINARY

# INDIAN POLITY – WORKSHEET

## அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்

## 1. அடிப்படை கருத்துகள் (Basic Concepts)

அரசியலமைப்பில் அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் பகுதி IVல் சரத்து 36லிருந்து 51 வரை குறிப்பிடப்பட்டுள்ளது.

- அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இந்த யோசனையை அயர்லாந்து அரசியலமைப்பிலிருந்து (1937) (இவை ஸ்பெயின் அரசியலமைப்பின் நகல் ஆகும்) பெற்றனர்.
- இதை டாக்டர் B.R.அம்பேத்கார் அவர்கள் அரசியலமைப்பின் புதுமையான அம்சங்கள் என்று குறிப்பிடுகிறார்.
- அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் இந்திய அரசியலமைப்பின் தத்துவங்களை உள்ளடக்கியதோடு ஒரு ஆன்மாவாக செயல்படுகிறது.
- கிரான்வில்லி ஆஸ்டின் என்பவர் அரசு நெறிமுறைக் கோட்பாடுகளையும் அடிப்படை உரிமைகளையும் அரசியலமைப்பின் மனசாட்சி என்று கூறுகிறார்.

## 2. அரசு நெறிமுறைக் கோட்பாட்டின் சிறப்பம்சங்கள் (Features of the Directive Priniciples)

1. ‘அரசின் வழிகாட்டு நெறிமுறை கோட்பாடுகள்’ என்பது, கொள்கைகளை உருவாக்கும்போதும் சட்டங்களை இயற்றும்போதும் அரசு மனதில் கொள்ள வேண்டிய குறிக்கோள்களைக் குறிக்கிறது. சரத்து 36 இன் படி, பகுதி IV இல் உள்ள “அரசு“ என்ற சொல், அடிப்படை உரிமைகள் தொடர்பான பகுதி III இல் உள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது

2. வழிகாட்டு நெறிமுறை கோட்பாடுகள், 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ‘அறிவுறுத்தல்கள் கருவி’ போன்றது. டாக்டர். பி.ஆர். அம்பேத்கர், “வழிகாட்டு நெறிமுறை கோட்பாடுகள், 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் கவர்னர் ஜெனரலுக்கும் இந்தியாவின் காலனிகளின் ஆளுநர்களுக்கும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் கருவி போன்றது’’ என்று கூறியுள்ளார்.

3. வழிகாட்டு நெறிமுறை கோட்பாடுகள், காலனித்துவ காலத்தில் இருந்த, ''போலிஸ் அரசை'' போல் அல்லாமல், "மக்கள்நல அரசை'' வலியுறுத்துகின்றன. இவை நாட்டில் பொருளாதார மற்றும் சமூக மக்களாட்சியை நிறுவ முயல்கின்றன.

4. வழிகாட்டு நெறிமுறை கோட்பாடுகள் மீறப்பட்டதற்காக எந்த நபரும் நீதிமன்றங்களை அணுக முடியாது.

5. ஒரு சட்டத்தின் அரசியலமைப்புத் தன்மையை நிர்ணயிக்கும் போது, ஒரு வழிகாட்டு நெறிமுறை கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கு அந்த சட்டம் முயல்கிறது என்று நீதிமன்றம் கண்டறிந்தால், சரத்து 14 (சட்டத்தின் முன் சமம்) அல்லது சரத்து 19 (ஆறு சுதந்திர உரிமைகள்) கீழ், ''நியாயமான கட்டுப்பாடாக'' கருதி அத்தகைய சட்டத்தை அரசியலமைப்பு மீறலில் இருந்து காப்பாற்றலாம் என்று உச்ச நீதிமன்றம் பலமுறை தீர்ப்பளித்துள்ளது.

**சரத்த 36**

◊ அடிப்படை உரிமையில் பல சரத்துகளில் 'அரசு' (state) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. சரத்து 12ல் (பகுதி III) அரசு கீழ்க்கண்டவற்றை குறிக்கிறது.

- இந்திய அரசாங்கம் மற்றும் இந்திய பாராளுமன்றம் அதாவது மத்திய அரசின் நிர்வாக மற்றும் சட்டமன்ற அங்கங்கள்
- மாநில அரசாங்கம் மற்றும் மாநில சட்டமன்றம், அதாவது மாநில அரசின் நிர்வாக மற்றும் மாநில சட்டமன்ற அங்கங்கள்.
- அனைத்து உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சி, பஞ்சாயத்து, மாவட்ட வாரியம், மேம்பாட்டு அறக்கட்டளைகள் மற்றும் பல.
- மற்ற அனைத்து சட்டப்பூர்வ அதிகார அமைப்புகள் மற்றும் சட்ட பூர்வமற்ற அதிகார அமைப்புகளான LIC, ONGC, SAIL மற்றும் பலவற்றை 'அரசு' என்ற வார்த்தை குறிப்பிடுகிறது.

**சரத்து 37**

சரத்து 37 இன் படி, "இந்தப் பகுதியில் உள்ள விதிகள் எந்த நீதிமன்றத்தாலும் செயல்படுத்தப்படாது, ஆனால் அதில் வகுக்கப்பட்டுள்ள கோட்பாடுகள் நாட்டின் நிர்வாகத்தில் அடிப்படையானவை மற்றும் சட்டங்களை உருவாக்குவதில் இந்த கோட்பாடுகளைப் பயன்படுத்துவது அரசின் கடமையாகும்"

அதாவது, இந்திய அரசியலமைப்பின் இந்த விதிகள் எந்த நீதிமன்றத்தாலும் செயல்படுத்தப்பட முடியாதவை. ஆனால் நாட்டின் ஆளுகையில் இவை அடிப்படையானவை. நாட்டில் நீதிக்குட்பட்ட சமுதாயத்தை உருவாக்க இந்தக் கோட்பாடுளைப் பயன்படுத்த வேண்டியது மத்திய மற்றும் மாநில அரசுகளின் கடமை ஆகும்.

## 3. அரசு நெறிமுறைக் கோட்பாட்டின் வகைகள் (Classification of the Directive Principles)

- ◊ அரசியலமைப்பு அரசு நெறிமுறைக் கோட்பாட்டை வகைப்படுத்தவில்லை.
- ◊ எனினும், அதிலுள்ள கருத்துகள் மற்றும் முறைகளை அடிப்படையாக கொண்டு மூன்று வகையாக பிரிக்கிப்படுகிறது.

அரசு நெறிமுறைக் கோட்பாடுகள்

| சமதர்ம கொள்கை | காந்தியக் கொள்கை | தாராள மற்றும் அறிவுச்சார்ந்த கொள்கை |
|---|---|---|

## சமதர்ம கொள்கைகள் (Socialistic Principles)

- சமதர்ம கொள்கைகள், சமதர்ம சித்தாந்தங்களை பிரதிபலிக்கின்றன.
- இந்த கொள்கைகள் ஜனநாயக சமதர்ம அரசை அமைப்பதற்கான பாதையை அமைக்கின்றது.

**1. சரத்து 38**

- இந்த கொள்கைகள் அரசின் முன்னேற்றம் மற்றும் மக்களின் நலனுக்காக பொருளாதாரம், அரசியல் மற்றும் சமூக நீதியை பாதுகாக்கும் விதமாக வருமானம், வசதி மற்றும் வாய்ப்புகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க வழிவகுக்கின்றன.

**2. சரத்து 39**

- சரத்து 39ல் அரசானது பின்வரும் வழிகளில் சமதர்ம கொள்கையை பாதுகாக்கிறது.

  a. அனைத்து குடிமக்களுக்கும் வாழ்வாதார தேவைகளை பூர்த்தி செய்தல்
  b. பொது நன்மைக்காக மூலவளங்கள் மற்றும் உடமைகளை சமமாக பகிர்ந்தளித்தல்.
  c. ஒரே இடத்தில் சொத்து குவிப்பு ஏற்படுவதை தவிர்த்தல்
  d. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சம வேலைகளில் சம ஊதியம் வழங்கப்படுதல்
  e. தொழிலாளர்களின் சுகாதாரம் மற்றும் நலன்களையும் மற்றும் குழந்தைகளைக் கட்டாய வேலைகளிலிருந்தும் பாதுகாத்தல்.
  f. குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதி செய்தல்.

**3. சரத்து 39A**

சம நீதியை உறுதி செய்தல் மற்றும் ஏழைகளுக்கு இலவச சட்ட உதவியை வழங்குதல்

**4. சரத்து 41**

- சரத்து 41ல் அரசானது கல்வி உரிமை மற்றும் பணி உரிமையை பாதுகாத்தும் வேலையின்மை, முதுமை, நோய், இயலாமை அல்லது மாற்றுத்திறன் சுழலில் பொது உதவிகளை வழங்கியும் சமூகத்தை மேம்படுத்த வேண்டும்

**5. சரத்து 42**

- சரத்து 42ல் அரசானது மனிதாபிமான நிலைமையை கருத்தில் கொண்டு பாதுகாப்பான பணிச்சூழல் மற்றும் பேறுகால உதவிகளை வழங்க வேண்டும்.

**6. சரத்து 43**

- சரத்து 43: இதில் அரசானது, அனைத்து தொழிலாளர்களுக்கும் அடிப்படை வாழ்க்கை ஊதியம், நல்ல வாழ்க்கைத் தரம் மற்றும் சமூக மற்றும் கலாச்சார வாய்ப்புகளை உறுதிப்படுத்த வேண்டும்.

**7. சரத்து 43A**

சரத்து 43A இதில் அரசானது எந்த தொழிற்சாலையிலும் அதன் நிர்வாகம், நிறுவனம் மற்றும் நிறுவனங்களின் மேலாண்மையில் பணியாளர்களின் பங்கை உறுதி செய்ய வேண்டும்

**8. சரத்து 47**

- சரத்து 47ல் அரசானது பொது சுகாதார மேம்பாடு ஊட்டச்சத்து தரம், மக்களின் வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை உயர்த்த வேண்டும்.

## காந்தியக் கொள்கைகள் (Gandhian Principles)

தேசிய இயக்கத்தின் போது காந்தி வகுத்தளித்த மறுசீரமைப்பு திட்டத்தை பிரிதிநிதித்துவபடுத்தும் விதமாக அரசியலமைப்பில் இந்த கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்த கொள்கையானது காந்தியின் கனவை பூர்த்தி செய்யும் விதமாக அமைந்துள்ளது. அவருடைய கருத்துகள் அரசு நெறிமுறைக் கோட்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

- சரத்து 40 அரசானது சுய அரசாங்கத்தின் அங்கமாக இயங்குவதற்கும், அவற்றை செயல்படுத்துவதற்கும் தேவையான சில அதிகாரங்களுடன் ஊராட்சி அமைப்புகளை உருவாக்க வேண்டும்.
- சரத்து 43 கிராமப்பகுதிகளில் தனிப்பட்ட அல்லது கூட்டுறவு அடிப்படையில் குடிசைத் தொழில்களை ஊக்குவிக்க வேண்டும்.
- சரத்து 43B - கூட்டுறவு சங்கங்களைத் தோற்றுவித்து அவற்றில் தன்னாட்சி செயல்பாடு, பிரதிநிதித்துவ கட்டுப்பாடு, தொழில்முறை மேலாண்மையை மேம்படுத்துதல்
- சரத்து 46 அரசானது தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் மற்றும் நலிந்த பிரிவினரின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களை பராமரிக்க வேண்டும். மேலும் சமூக அநீதி மற்றும் சுரண்டலுக்கு எதிராக அவர்களை பாதுகாக்க வேண்டும்.
- சரத்து 47: உடல்நலத்தை பாதிக்கும் போதை பானங்கள் மற்றும் போதைப் பொருட்களின் பயன்பாட்டை தடைச் செய்ய வேண்டும்.

- சரத்து 48 பசுக்கள், கன்றுகள் மற்றும் கறவை மற்றும் வரைவு கால்நடைகளை இறைச்சிக்காக கொல்லப்படுவதை தடுத்து அவற்றின் இனங்களைப் பாதுகாக்க வேண்டும்.

## தாராள மற்றும் அறிவுச்சார்ந்த கொள்கைகள் (Liberal – Intellectual Principles)

இந்த பிரிவால் சேர்க்கப்பட்ட கொள்கைகள் தாராளத்துவத்தின் சித்தாந்தத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன.

- சரத்து 44: அரசானது இந்தியாவின் எல்லை முழுவதும் பொதுவான குடியுரிமைச் சட்டத்தை வழங்க வேண்டும்.
- சரத்து 45: அனைத்து ஆறு வயது குழந்தைகளுக்கும் ஆரம்ப கல்வி மற்றும் சிறுவயது பராமரிப்பு வழங்குவதை கூறுகிறது.
- சரத்து 48: அரசானது நவீன மற்றும்அறிவியல் அடிப்படையில் விவசாயம் மற்றும் கால்நடை அமைப்பை உருவாக்க முயற்சி செய்ய வேண்டும்.
- சரத்து 48A: அரசானது சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் மற்றும் நாட்டின் காடுகள் மற்றும் வனவிலங்குகளை பாதுகாக்கவும் முயற்சி செய்ய வேண்டும்.
- சரத்து 49: அரசானது தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவிக்கப்பட்ட கலை அல்லது வரலாற்று சிறப்புமிக்க நினைவுச்சின்னங்கள், இடங்கள் மற்றும் பொருட்களைப் பாதுகாக்க வேண்டும்.
- சரத்து 50: அரசின் பொதுப் பணிகளில் நீதித்துறையை நிர்வாகத்தில் இருந்து பிரித்தல்
- சரத்து 51: அரசானது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய நாடுகளுக்கிடையே நல்லுறவினை ஊக்குவிக்க வேண்டும். சர்வதேச சட்டம் மற்றும் ஒப்பந்தகளை மதித்து நடுவர்கள் மூலம் சர்வதேச பிரச்சனைக்கான தீர்வை பெற வேண்டும்.

## 4. புதிய நெறிமுறைக் கோட்பாடுகள் (அரசியலமைப்புத் திருத்தங்கள்) (New Directive Principles (Amendment)

**42 – வது சட்டத்திருத்தம் 1976 நான்கு புதிய நெறிமுறைக் கோட்பாடுகளைச் சேர்த்தது.**

1. சரத்து 39(f): குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சியை உறுதி செய்தல்
2. சரத்து 39A: சம நீதி மற்றும் ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி.
3. சரத்து 43A: அரசானது எந்த தொழிற்சாலையிலும் அதன் நிர்வாகம் மற்றும் மேலாண்மையில் பணியாளர்களை பங்குபெறச் செய்ய வேண்டும்.
4. சரத்து 48A: அரசானது சுற்றுச்சூழலை பாதுகாக்கவும் காடுகள் மற்றும் வனவிலங்குகளை பாதுகாக்கவும் முயற்சி செய்ய வேண்டும்.

**44 – வது சட்டத்திருத்தம் 1978 மேலும் ஒரு புதிய நெறிமுறைக் கோட்பாட்டைச் சேர்த்தது.**



APOLLO STUDY CENTRE

1. சரத்து 38: அரசானது வருமானம், நிலை, வாய்ப்புகள், வசதிகள் ஆகியவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முற்பட வேண்டும்.

86 – வது சட்டத்திருத்தம் 2002 சரத்து 45ன் பொருளை சரத்து 21A-இன் படி அனைத்து ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு ஆரம்ப கல்வி மற்றும் சிறுவயது பராமரிப்பு வழங்க வேண்டும் என மாற்றியமைத்தது.

## 5. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறைக் கோட்பாடுகளுக்கும் இடையேயான முரண்பாடு

## Conflict Between Fundamental Rights and Directive Principles

**செம்பகம் துரைராஜன் வழக்கு (1951)**

- செம்பகம் துரைராஜன் வழக்கில், உச்நீதிமன்றம் அடிப்படை உரிமைகள் மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகளுக்கிடையே முரண்பாடு வருமாயின் அடிப்படை உரிமைகளே மேம்பட்டு நிற்கும் எனத் தீர்ப்பளித்தது.
- நெறிமுறைக் கோட்பாடுகள், அடிப்படை உரிமைகளோடு ஒத்து, அதற்கு துணையாகச் செயல்பட வேண்டும். இருப்பினும், அடிப்படை உரிமைகள் அரசியலமைப்பு சட்டத்திருத்தங்கள் மூலம் பாராளுமன்றத்தால் திருத்தம் செய்யப்படலாம்.
- இதன் விளைவாக, நாடாளுமன்றம் முதலாம் (1951) நான்காம் (1955) மற்றும் பதினேழாம் (1964) சட்டத்திருத்தங்களைக் கொண்டு வந்து நெறிமுறைக் கோட்பாடுகளை அமலாக்கம் செய்தது.

**கோலக்நாத் வழக்கு (1967)**

- மேற்கண்ட நிலை 1967-ம் ஆண்டு கோலக்நாத் வழக்கின் உச்சநீதிமன்ற தீர்ப்பின் மூலம் ஒரு பெரிய மாற்றத்தைக் கண்டது. இதில் உச்சநீதிமன்றம் - பாராளுமன்றம் அடிப்படை உரிமைகளின் "புனிதத்தன்மை" யை எடுக்கவோ, சுருக்கவோ உரிமை இல்லை என தீர்ப்பளித்தது.
- அதாவது, நெறிமுறைக் கோட்பாடுகளை அமலாக்கம் செய்ய அடிப்படை உரிமைகளை திருத்தம் செய்யலாகாது எனத் தீர்ப்பளித்தது.

**24வது சட்டத்திருத்தம்**

- பாராளுமன்றம் 24-வது (1971) மற்றும் 25-வது (1971) சட்டத்திருத்தங்கள் மூலம் கோலக்நாத் வழக்கின் உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு பதிலளித்தது.
- 24-வது சட்டத்திருத்தம், அரசியலமைப்பு சட்டத்திருத்தங்கள் மூலம், அடிப்படை உரிமைகளை மாற்றியமைக்க பாராளுமன்றத்திற்கு உரிமை இருக்கிறது என்றது.

**25வது சட்டத்திருத்தம்**

- 25-வது சட்டத்திருத்தம் புதிய சரத்து 31C – ஐ அரசியலமைப்பில் நுழைத்தது. அதன்படி,



APOLLO STUDY CENTRE

1. சரத்து 39(b) மற்றும் (c)-ல் குறிப்பிடப்பட்டுள்ள சமதர்ம கோட்பாடுகளை அமலாக்ம் செய்யும் எந்த சட்டமும், சரத்து 14, 19 (அ) 31-ல் உள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரண்பாடாக உள்ளது என்று செல்லத்தகாததாகச் செய்ய முடியாது.

> சரத்து 39(b)
> பொது நலனைப் பேணுவதற்கு சமூகத்தின் பொருள் வளங்களின் உரிமைகளும் கட்டுப்பாடும் சிறந்த முறையில் பகிர்ந்தளிக்கப்படுவதை அரசின் கொள்கைகள் வழிநடத்த வேண்டும்.
>
> சரத்து 39(c)
> செல்வம் மற்றும் உற்பத்திச் சாதனங்கள் ஓரிடத்தில் குவிந்து பொருளாதார அமைப்பின் செயல்பாட்டிற்கு தீங்கு விளைவிக்காமல் பாதுகாக்கும் நோக்கில் அரசின் கொள்கைகள் வழிநடத்தபட வேண்டும்.

2. அப்படி நெறிமுறைக் கோட்பாடுகளை அமலாக்கம் செய்வதை எந்த நீதிமன்றத்திலும் கேள்விக்கு உட்படுத்த முடியாது என்றது.

**கேசவனந்த பாரதி வழக்கு (1973)**

கேசவனந்த பாரதி வழக்கில் (1973), உச்சநீதிமன்றம் சரத்து 31C-ன் இரண்டாவது பாகம் அரசியலமைப்புக்கு எதிரானது எனத்தீர்ப்பளித்தது. இருப்பினும், சரத்து 31C இன் முதல் விதியானது அரசியலமைப்பின்படி செல்லுபடியாகும் எனத்தீர்ப்பளித்தது.

**42வது சட்டத்திருத்தம்**

42-வது அரசியலமைப்பு சட்டத்திருத்தம் 1976, நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு, அடிப்படை உரிமைகள் சரத்து 14, 19, 31-ன் மீது சட்டரீதியான முதன்மை மற்றும் மேலாதிக்கத்தை அளித்தது.

**மினர்வா மில் வழக்கு (1980)**

- மினர்வா மில் வழக்கில் (1980) நெறிமுறைக் கோட்பாடுகள் மறுபடியுமாக அடிப்படை உரிமைகளுக்குக் கீழாகக் கொண்டுவரப்பட்டது. உச்சநீதிமன்றம், இந்திய அரசியலமைப்பு அடிப்படை உரிமைகள் மற்றும் நெறிமுறைக் கோட்பாடுகளுக்கிடையே உள்ள சமநிலையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது என அறிவித்தது.

- தற்போதைய நிலையில், அடிப்படை உரிமைகள் 'நெறிமுறைக் கோட்பாடுகள் மீது முதன்மை வகிக்கிறது. இருப்பினும், பாராளுமன்றம் அரசியலமைப்பின் "அடிப்படை கட்டமைப்பை" அழிக்காமல், நெறிமுறைக் கோட்பாடுகளை அமலாக்கம் செய்ய, அடிப்படை உரிமைகளை சட்டத்திருத்தம் செய்யலாம்.

## 6. வழிகாட்டுதல் கொள்கைகளை செயல்படுத்தல்
## Implementation of Directive Principles

**அரசு வழிகாட்டுதல் கோட்பாடுகளை செயல்படுத்த பல்வேறு திட்டங்களை வகுத்தது.**

1. திட்டகுழு(1950)
2. நிதி ஆயோக் (2015)
3. நிலச் சீர்திருத்தச் சட்டம்
4. மத்திய தொழிலாளர் சட்டங்கள்
5. தேசிய அளவிலான ஆணையங்கள்
6. ஊரக நலத்திட்டங்கள்
7. மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ் அமைப்பு
8. சுற்றுச்சூழல் தொடர்பான சட்டங்கள்

## 7. பகுதி IVல் குறிப்பிடாத நெறிமுறை கோட்பாடுகள்
## Directives Outside Part IV

- அரசியலமைப்பில் பகுதி IV தவிர மற்ற பகுதியில் நெறிமுறை கோட்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை

**பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடியினர் பங்களிப்பு**

1. பகுதி XVI ல் உள்ள சரத்து 335ல் ஒன்றியம் மற்றும் மாநில விவகாரங்கள் தொடர்பான சேவைகள் மற்றும் பணி நியமனத்தில் நிர்வாக திறனை பாதிக்கு மேல் பட்டியலினத்தோர் மற்றும் பழங்குடி உறுப்பினர்களுக்கான பணி நியமனம் கருத்தில் கொள்ளப்படுகிறது.

**தாய்மொழி வழியில் கல்வி**

2. பகுதி XVIIல் உள்ள சரத்து 350ல் தாய்மொழியை பற்றி வழிமுறை: ஒவ்வொரு மாநிலம் மற்றும் உள்ளூர் நிர்வாகத்தில் மொழிவாரியாக சிறுபான்மையினராக இருக்கும் குழந்தைகளின் முதல் நிலை கல்வியை தாய்மொழியில் கற்பித்தலுக்கு போதுமான வசதிகளை வழங்குவது என்று குறிப்பிடுகிறது.

**இந்தி மொழி வளர்ச்சி**

3. பகுதி XVIIல் உள்ள சரத்து 351: இந்தியாவின் பண்முக பண்பாட்டின் அனைத்து அம்சங்களை வெளிப்படுத்தும் ஒரு நடுத்தர அமைப்பாக கருதும் இந்தி மொழியை பரப்ப ஊக்குவிப்பது ஒன்றியத்தின் கடமையாக கருதப்படுகிறது.

மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகள் நீதிமன்றத்தால் செயல்படுத்த இயலாதவை. அரசியலமைப்பின் அனைத்து பகுதிகளையும் ஒன்றாக கருதும் போது, இவை நீதித்துறையின் சம முக்கியத்துவம் மற்றும் கவனத்தை ஈர்க்கும் விதமாக அமைந்துள்ளது.

## 8. அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு நெறிமுறைக் கோட்பாடுகளுக்கிடையேயான வேறுபாடுகள்

## Difference Between Fundamental Rights and Directive Principles

| வ.எண் | அடிப்படை உரிமைகள் | அரசு நெறிமுறைக் கோட்பாடுகள் |
|---|---|---|
| 1. | அரசின் சில செயல்பாடுகளை தடை செய்வதால் எதிர்மறை ஒன்றாக கருதப்படுகிறது | அரசின் சில செயல்பாடுகளை ஊக்குவிப்பதால் நேர்மறை ஒன்றாக கருதப்படுகிறது. |
| 2. | இவை மீறும் வழக்கில் இவற்றை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடராலம். | இவை மீறும் வழக்கில் இவற்றை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர இயலாது. |
| 3. | நாட்டில் அரசியல் ஜனநாயகத்தை நிறுவுவதே இதன் நோக்கமாகும். | நாட்டில் சமூக பொருளாதார ஜனநாயகத்தை நிறுவுவதே இதன் நோக்கமாகும். |
| 4. | இவற்றிற்கு சட்ட தடைகள் உண்டு. | இவற்றிற்கு தார்மீக மற்றும் அரசியல் அரசியல் தடைகள் உண்டு |
| 5. | தனி மனித நலனை மேம்படுத்துவதாக உள்ளது. | இவை சமூக நலனை மேம்படுத்துவதாக உள்ளது |
| 6. | இவற்றை செயல்படுத்த எந்த சட்டமும் தேவையில்லை.<br><br>தானாக செயல்படுத்தபடும். | இவற்றை செயல்படுத்த சட்டம் தேவைப்படுகிறது.<br><br>தானாக செயல்படாது. |
| 7. | நீதிமன்றம் அடிப்படை உரிமையை மீறும் சட்டத்ததையும் அரசியலமைப்பற்றது என்று அறிவித்து கட்டுப்படுத்துகிறது. | நீதிமன்றம் அரசு நெறிமுறைக் கோட்பாட்டை மீறும் எந்த ஒரு சட்டத்தையும் அரசியலமைப்பற்றது என்று அறிவித்து கட்டுப்படுத்த இயலாது. எனினும், நெறிமுறைக் கோட்பாட்டை செயல்படுத்தும் நோக்கத்திற்காக அதன் அரசியலமைப்புத் தன்மையை நிலைநிறுத்த இயலும். |

APOLLO STUDY CENTRE

## 9. வழிகாட்டு நெறிமுறைக் கோட்பாடுகளின் செயலுறுதிப்பாடு
## Sanction Behind Directive Principles

**சர் பி.என். ராவ்**

ஒரு தனிநபரின் உரிமைகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட வேண்டும் - நீதிமன்றத்தை அணுகக்கூடியவை மற்றும் அணுக இயலாதவை. இது வரைவுக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**அல்லாடி கிருஷ்ண சுவாமி ஐயர்**

மக்களுக்குப் பொறுப்பான எந்த அரசும், அரசியலமைப்பின் நான்காம் பாகத்தில் உள்ள விதிகளை இலகுவாக புறக்கணிக்க முடியாது

**டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்**

மக்கள் வாக்கெடுப்பில் உருவாகும் அரசாங்கம், அதன் கொள்கையை வடிவமைக்கும் போது வழிகாட்டுக் கோட்பாடுகளை புறக்கணிக்க முடியாது. அவற்றை எந்த அரசேனும் புறக்கணித்தால், தேர்தல் நேரத்தில் வாக்காளர்கள் முன் அதற்கு பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

## 10. நெறிமுறைக் கோட்டபாடுகளின் பயன்பாடுகள்
## Utility of Directive Principles

**எல்.எம்.சிங்வி**

சிறந்த சட்ட நிபுணரான எல்.எம். சிங்வியின் கருத்துப்படி, வழிகாட்டு நெறிமுறைகள் என்பது அரசியல் சட்டத்திற்கு உயிர் கொடுக்கும் விதிகள் ஆகும் மேலும் அவை சமூக நீதியின் தத்துவம் ஆகும்.

**எம்.சி. சாகலா**

இந்தியாவின் முன்னாள் தலைமை நீதிபதி எம்.சி. சாகலா, “இந்தக் வழிகாட்டு நெறிமுறைகள் அனைத்தும் முழுமையாக நிறைவேற்றப்பட்டால், நம் நாடு பூமியின் சொர்க்கமாக இருக்கும்“ என்று கருத்து தெரிவித்துள்ளார்.

**கிரான்வில் ஆஸ்டின்**

கிரான்வில் ஆஸ்டின் கருத்துப்படி, வழிகாட்டு நெறிமுறைகள் சமூகப் புரட்சியின் இலக்குகளை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்வதையோ அல்லது அதை நிறைவேற்ற தேவையான நிலைமைகளை நிறுவுவதன் மூலம் இந்த சமூகப் புரட்சியை வளர்ப்பதையோ நோக்கமாகக் கொண்டுள்ளன.

**சர் பி.என். ராவ்**

அரசியல் நிர்ணய சபையின் அரசியலமைப்பு ஆலோசகரான சர் பி.என். ராவ்,வழிகாட்டு நெறிமுறைகள் அரசின் அதிகாரிகளுக்கான தார்மீகக் கட்டளைகள் என்று கூறியுள்ளார். மேலும், அவற்றிற்கு குறைந்தபட்சம் ஒரு கல்விசார் மதிப்பு இருக்கிறது என்று கருத்து தெரிவித்துள்ளார்.

APOLLO STUDY CENTRE

# 11. வழிகாட்டுதல் கொள்கைகளின் மீதுள்ள விமர்சனங்கள்
# Criticism of the Directive Principles

**1. <u>சட்டப்படி அற்றது</u>**

- மிகைப்படுத்தப்பட்ட கொள்கைகள்
- வங்கியில் ஒரு காசோலை வங்கியின் ஆதாரங்கள் அனுமதித்தால் மட்டுமே செலுத்தப்படும் ஒரு வங்கி காசோலை போன்றது -கே டி ஷா
- உணர்வுகளின் உண்மையான குப்பைத் தொட்டி
  -டி.டிகிருஷ்ணமாச்சாரி
- நோக்கங்கள் மற்றும் ஆசைகளின் அறிக்கை கே.சி வீர்
- ஆசைமிகுந்த கொள்கை - ஐவர் ஜென்னிங்ஸ்

**2. <u>முன் பின் முரணான தொகுப்பு</u>**

- நிலையான தத்துவம் இல்லை - ஐவர் ஜென்னிங்ஸ்

**3. <u>பழமைவாதம்</u>**

- இது 19ஆம் நூற்றாண்டின் இங்கிலாந்தின் அரசியல் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது

**4. <u>அரசியலமைப்பு மோதல்</u>கள்**

1. மத்திய (மற்றும்) மாநிலங்கள்
2. குடியரசுத்தலைவர் (மற்றும்) பிரதமர்
3. ஆளுநர் (மற்றும்) முதல்வர்

**கே. சந்தானம்**


**PH: 24339436, 42867555, 9840226187**
APOLLO STUDY CENTRE